துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை (25.2.2025) அன்று, மகாராஷ்டிரா மாநிலம் தானேவில் நடைபெற்ற அகில இந்திய அளவிலான இறகுப் பந்துப் போட்டியில், 11 வயதுக்குட்பட்டோர் பிரிவில் தங்கம் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த செல்வன். சிபிஜெரோ சந்தித்து வாழ்த்து பெற்றார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் உடனிருந்தனர்.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (26.02.2025) சென்னை மயிலாப்பூர் கபாலீசுவரர் திருக்கோயில் சார்பில் கபாலீசுவரர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மகா சிவராத்திரி பெருவிழாவினை தொடங்கி வைத்து, இறை அருட்செல்வி தியாவின் பக்தி இசை நிகழ்ச்சியை பார்வையிட்டார். உடன் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் த.வேலு. சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் சி.பழனி, திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, இணை ஆணையர்கள் திருமதி கி.ரேணுகாதேவி, திருமதி பெ.க.கவெனிதா மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளின் கீழ்

45 கலைஞர்கள் - மரபுரிமையினருக்கு 40 லட்சம் ரூபாய் நிதியுதவி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, பிப். 27 -

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளின் கீழ் 40 இலட்சம் ரூபாய்க்கான நிதியுதவினை 45 கலைஞர்கள் மற்றும் மரபுரிமையினருக்கு தமிழ் நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.2.2025) தலைமைச் செயலகத்தில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் கலைமாமணி விருது பெற்று நலிந்த நிலையில் வாழும் 10 கலைஞர்களுக்கு பொற்கிழியாக தலா 1 இலட்சம் ரூபாய் நிதியுதவி, தமிழில் கருத்தாழமிக்க அரிய கலைகள் சார்ந்த நூல்களைப் பதிப்பிக்க 5 நூலாசிரியர்களுக்கு தலா 2 இலட்சம் ரூபாய் நிதியுதவி, தமிழில் புதிய நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்ய 5 நாடகக் கலைஞர்களுக்கு தலா 1.50 இலட்சம் ரூபாய் நிதியுதவி, தமிழில் புதிய நாட்டிய நாடகங்களை தயாரித்து மேடையேற்றம் செய்ய 5 நாட்டியக் கலைஞர்களுக்கு தலா 1.50 இலட்சம் ரூபாய் நிதியுதவி மற்றும் 20 மறைந்த கலைஞர்களின் மரபுரிமையினருக்கு குடும்பப் பராமரிப்பிற்காக தலா 25 ஆயிரம் ரூபாய் நிதியுதவி ஆகிய நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தமிழ்நாடு அரசால் 1955ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் என்ற அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. இச் சங்கமானது, இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என்ற முத்தழிழுக்கும் பெருமை சேர்க்கும் விதத்தில், 1973ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

கலை பண்பாட்டுத் துறையின் ஓர் அங்கமாகத் திகழும், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் நிதியுதவியின் மூலம் தொன்மையான கலைகளை வளர்த்தல், அக்கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை ஊக்குவித்தல், அழிந்து வரும் கலை வடிவங்களை ஆவணமாக்குதல், நாடகம், நாட்டிய நாடகங்களுக்கு புத்துயிர் அளித்தல், தமிழகப் பாரம்பரிய கிராமியக் கலைகளை வெளி மாநிலங்களிலும், உலகளவிலும் எடுத்துச் செல்லுதல், தமிழ்க் கலைகளின் வளர்ச்சிக்கு அளப்பரிய பங்களிப்பு அளிக்கும் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்குதல், நலிந்த நிலையிலுள்ள கலைஞர்களுக்கு மாதாந்திர நிதியுதவி வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

கலைமாமணி விருது பெற்று நலிந்த நிலையில் வாழும் 10 கலைஞர்களுக்கு பொற்கிழி வழங்குதல்

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பில் கலைமாமணி விருது பெற்று நலிந்த நிலையில் வாழும் ஆச்சாள்புரம் எஸ். சின்னதம்பி, ஆக்காட்டி ஆறுமுகம், நெல்லை சுந்தரராஜன், மதுரை ஜி.எஸ். மணி, ஏ.என். பாக்கியலட்சுமி, திருமதி சீதாலட்சுமி (எ) ஜி.எம். சித்திரைசெல்வி, வி. நாகு, திருமதி பி. சீதாலட்சுமி, திருமதி ஆர்.எஸ். ஜெயலதா, எஸ். ஆண்ட்ரூஸ் ஆகியோருக்கு பொற்கிழித் தொகையாக தலா 1 இலட்சம் ரூபாய் வழங்கிடும் அடையாளமாக 6 கலைமாமணி விருதாளர்களுக்கு பொற்கிழிக்கான காசோலைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

தமிழில் கருத்தாழமிக்க அரிய கலைகள் சார்ந்த நூல்களைப் பதிப்பிக்க 5 நூலாசிரியர்களுக்கு நிதியுதவி வழங்குதல்

தமிழில் கருத்தாழமிக்க அரிய கலைகள் சார்ந்த நூல்களைப் பதிப்பிக்க முனைவர் சண்முக செல்வகணபதி, முனைவர் ப. ரங்கராஜ், வளப்பக்குடி வீரசங்கர், முனைவர் இரா. சீனிவாசன், செ. நடராஜன் ஆகிய 5 நூலாசிரியர்களுக்கு நிதியுதவி வழங்கிடும் அடையாளமாக 2 நூலாசிரியர்களுக்கு தலா 2 இலட்சம் ரூபாய் நிதியுதவிக்கான ஆணைகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

தமிழில் புதிய நாடகங்கள் மற்றும் நாட்டிய நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்ய நிதியுதவி வழங்குதல்

தமிழில் புதிய நாடகங்கள் மற்றும் நாட்டிய நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்திட 5 நாடகக் கலைஞர்களுக்கும், 5 நாட்டியக் கலைஞர் களுக்கும் நிதியுதவி வழங்கிடும் அடையாளமாக 4 கலைஞர்களுக்கு தலா 1.50 இலட்சம் ரூபாய் நிதியுதவிக்கான ஆணைகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

மறைந்த கலைஞர்களின் மரபுரிமையினருக்கு குடும்பப் பராமரிப்பு நிதியுதவி வழங்குதல்

மறைந்த 20 கலைஞர்களின் மரபுரிமையினருக்கு குடும்பப் பராமரிப்பிற்காக தலா 25 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கிடும் அடையாளமாக 2 மரபுரிமையினருக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் நிதியுதவிக்கான காசோலைகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளின் கீழ் மொத்தம் 40 இலட்சம் ரூபாய்க்கான நிதியுதவினை 45 கலைஞர்கள் மற்றும் மரபுரிமையினருக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்றையதினம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் திருமதி கவிதா ராமு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மற்றும் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தின் தலைவர் வாகை சந்திரசேகர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலர் திருமதி விஜயா தாயன்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவராக ஆர்.பாலகிருஷ்ணன் இ.ஆ.ப. (ஓய்வு) நியமனம்!

தமிழ்நாடு அரசு அறிவிப்பு

சென்னை, பிப். 27 -

சென்னை, தரமணி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவராக ஆர். பாலகிருஷ்ணன் இ.ஆ.ப. (ஓய்வு) நியமிக்கப்பட்டு ள்ளார். இந்த நியமனம் தமிழ் மொழி மற்றும் பண்பாட்டு ஆய்வுகளுக்கு புதிய உந்துதலை அளிக்கும்.

இது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு:-

ஆர். பாலகிருஷ்ணன் இ.ஆ.ப. (ஓய்வு) அவர்கள் ஒரு புகழ்பெற்ற தமிழ் மொழி அறிஞரும், ஆட்சிப் பணி வல்லுநரும் ஆவார். தமிழ் இலக்கியத்தில் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டங்களைப் பெற்ற இவர், தமிழில் குடிமைப்பணித் தேர்வுகளை எழுதி வென்ற முதல் தமிழ் மாணவர்.

ஆய்வாளர், படைப்பாளர் என்ற இரு தளங்களில் செயல்படும் இவர் 15 நூல்களின் ஆசிரியர். சிந்து வெளிப் பண்பாட்டு தொல்லியல் தரவுகளை சங்க இலக்கியங்கள் மற்றும் தமிழ்நாட்டு அகழாய்வுத் தரவுகளோடு ஒப்பிட்டு இவர் எழுதியுள்ள ஆங்கிலம் மற்றும் தமிழ் நூல்கள் உலகின் கவனத்தை ஈர்த்துள்ளன.

இந்திய ஆட்சிப் பணியில் 1984ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், ஒடிசா அரசிலும் இந்தியத் தேர்தல் ஆணையத்திலும் 34 ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றியவர். ஒடிசா மாநிலத்தின் நிதித்துறைச் செயலர், கூடுதல் தலைமைச் செயலாளர், வளர்ச்சி ஆணையர் போன்ற பொறுப்புகளை வகித்தவர்.

2018ல் பணிஓய்வு பெற்ற இவர் அதன்பிறகு முன்னாள் ஒடிசா மாநில முதல்வரின் தலைமை ஆலோசகராக 2024 வரையில் பொறுப்பு வகித்தார். திராவிட மொழிக் குடும்பத்தின் பரவல், சிந்து சமவெளிப் பண்பாடு, தொல்தமிழ்த் தொன்மங்கள், சங்க இலக்கியங்கள் மற்றும் திருக்குறள் குறித்த இவரது செயல்பாடும் பங்களிப்பும் உலகத்தமிழர்களால் பாராட்டப்பட்டுள்ளது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி நாள்தோறும் 1000 பேருக்கு

அன்னம் தரும் அமுதக் கரம்! 7 ஆம் நாள்!

துறைமுகம் மேற்குப் பகுதியில் அமைச்சர் பி.கே,.சேகர்பாபு வழங்கினார்!

சென்னை, பிப். 27-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுத கரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் ஏழாம் நாள் துறைமுகம் மேற்கு பகுதியில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்.

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 6ஆம் நாளான நேற்று (26.2.2025) துறைமுகம் மேற்கு பகுதி, 1) வால் டாக்ஸ் ரோடு, ஹோட்டல் புளூ ஸ்டார்ட், பார்சல் ஆபிஸ் அருகில் 2) TNPSC சாலை, ரட்டன் பஜார் சந்திப்பு ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியாராஜன், பகுதி செயலாளர் எஸ்.முரளி, மண்டலக்குழுத்தலைவர் பி.ஸ்ரீராமுலு, இரா.நரேந்திரன் மாமன்ற உறுப்பினர்கள் திரு.ராஜேஷ் ஜெயின், துறைமுகம் மேற்கு பகுதி வட்ட செயலாளர்கள்: டி. சதிஷ்குமார், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, வே.பா. பிரபாகரன் இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், லண்டன் முருகன் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கே.பி.பி.சாமி

பிப்ரவரி 27 (2020)

பாரம்பரிய தி.மு.க. குடும்பத்தில் பிறந்து, தனது மீனவப் பகுதியில் கழகம் வளர பாடுபட்டதோடு, மீனவ சமுதாயம் முன்னேற பாடுபட்டவர்.

திருவொற்றியூர் நகர இளைஞர் அணி துணை அமைப்பாளர், நகர துணைச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர், மாநில மீனவர் அணிச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்து பணியாற்றியவர்.

2006, 2011 ஆகிய இரு முறை திருவொற்றியூர் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றதோடு, 2006ல் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான அமைச்சரவையில் மீன்வளத் துறை அமைச்சராக பணியாற்றினார்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

தென்காசி தெற்கு மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

தென்காசி, பிப்.27-

தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடந்தது.

கூட்டத்திற்கு தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமை வகித்தார்.

மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி அமைப்பாளர் கோமதிநாயகம் வரவேற்றார். மாவட்ட துணை அமைப்பாளர்கள் வி.டி.எம்.அலி,கணபதி, கருணாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மாநில விவசாயத் தொழிலாளர் அணி இணைச் செயலாளரும், ஆலங்குளம் சட்டமன்ற தொகுதி பார்வையாளருமான கணேஷ்குமார் ஆதித்தன் ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார்.

கூட்டத்தில் வரும் மார்ச் 1ம் தேதி தலைவர் மு.க. ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு பொதுமக்கள் பயன் பெறும் வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவது.

தென்காசி மாவட்டத்திற்கு வளர்ச்சி திட்ட பணிகள் துவக்க விழா, ஆய்வு, மற்றும் அடிக்கல் நாட்டு விழாவிற்கு விரைவில் வருகை தரும் தமிழக முதல்வருக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது.

வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் தலைவர் மு.க.ஸ்டாலின் அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துக் கூறி 234 சட்டமன்ற தொகுதிகளிலும் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற அயராது உழைக்க வேண்டும். தமிழ்நாட்டில் இந்தி திணிப்பை ஏற்படுத்த முயலும் ஒன்றிய பா.ஜ.க அரசை வன்மையாக கண்டிப்பது.

234 தொகுதிகளிலும் தலைவரின் ஓயாது உழைப்பின் மூலம் சிறப்பாக மக்கள் நலத் திட்டங்களை மக்களுக்கு கொண்டு செல்லும் வகையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அயராது உழைப்பு மற்றும் செயல்பாடுகளை பாராட்டி வாழ்த்துக்களை தெரிவிப்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி தலைவர் பாலாமணி நன்றி கூறினார்.

தாம்பரம் மாநகராட்சி மண்டலம்.4,58வது வார்டு நேரு நெடுஞ்சாலையில் அமைந்துள்ள சமுதாய நலக்கூடம் மறு சீரமைப்பு 9.5லட்சம் செலவில் பணி தொடங்கப்பட்டது. இதில் 4 வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் கலந்து கொண்டு பணிகளை துவக்கி வைத்தார் உடன் மாமன்ற உறுப்பினர் மதுமிதா மோகன், பி.புகழேந்தி, வட்ட செயலாளர் ஐசக் எக்ஸ் எம் சி வட்ட நிர்வாகிகள் மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டனர் .